FIRST INFORMATION REPORT
(Under Section 173 BNSS) முதல் தகவல் அறிக்கை (Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318750

1. District : தூத்துக்குடி PS: ஊ.த.ம.க. Year: 2026 FIR No.: 16/2026 Date: 23.09.2026
மாவட்டம் காவல்நிலையம் மாவு ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7.
(ii) Act சட்டம்: Act 1988 as amended Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: in 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 22.09.2026 நாள் முதல் நாள் வரை
Time Period : before 15.00 hrs. Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.09.2026 நேரம் 16.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.09.2026 நேரம் 16.00 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் தணிணி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் காயல்பட்டணம் நகராட்சி அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் 37 கிமீ தென்கிழக்கு.

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ஆ.சிரவண ராஜ் தந்தை / கணவர் பெயர் தவறு

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : முதலை உருவாய் (g) Address : உதவி ஆணையர் (ஆயம்) அலுவலகம், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரகம் தூத்துக்குடி.
தொழில் அய்வாளர் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

ச. மகேஸ்வரன், 54/2026, த/பெ. சித்திரணன், ஆணையர், காயல்பட்டணம் நகராட்சி, காயல்பட்டணம், தூத்துக்குடி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

இல்லை.

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed V. அண்ணாமலை Rank காவல் ஆய்வாளர் to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

J. Antho. 23/9/26
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Thoothukudi

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும்
23.09.2026 – 17.30 hrs.

Name: பெயர்
Rank: நிலை ..... எண் .....

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.10/2026

பணிந்து அனுப்பப்படுகிறது.

திரு.ச.மகேஸ்வரன், வயது 54/2026,
த/பெ.சக்கணன்,
ஆணையர்,
காயல்பட்டினம் நகராட்சி,
காயல்பட்டினம்.

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் ஆணையர் மற்றும் பணியாளர்கள் பொதுமக்களிடம் இருந்து கட்டிட வரைபட அனுமதி, வீட்டுத்தீர்வை பெயர் மாற்றம், புதிய வீட்டுத்தீர்வை, குடிநீர் தீர்வை பெயர் மாற்றம், புதிய குடிநீர் இணைப்பு, பிறப்பு / இறப்பு பதிவு செய்தல் மற்றும் இதர பணிகளுக்கு லஞ்சம் பெற்று வருவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் 22.09.2026ம் தேதி 15.00 மணி முதல் 19.45 மணி வரை துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.ஜ.சரவண வேல்ராஜ், த/பெ.ஜவஹர், முதுநிலை வருவாய் ஆய்வாளர், உதவி ஆணையர் (ஆயம்) அலுவலகம், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரகம், தூத்துக்குடி மாவட்டம் அவர்களுடன் காயல்பட்டினம் நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அறை, பொது பிரிவு, சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு ஆகியவற்றில் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.ஜ.சரவண வேல்ராஜ் அவர்கள் கொடுத்த புகார் மனுவை 23.09.2026ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்த போது 16.00 மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 10/2026, u/s 7 of P.C. Act, 1988 as amended in 2018-ன் படி மார்ஜினில் கண்ட எதிரி திரு.ச.மகேஸ்வரன் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: ஜ.சரவண வேல்ராஜ், த/பெ.ஜவஹர், முதுநிலை வருவாய் ஆய்வாளர், உதவி ஆணையர் (ஆயம்) அலுவலகம், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரகம், தூத்துக்குடி மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி. அம்மா, பொருள்: தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம் நகராட்சி அலுவலக திடீர் தணிக்கை செயல்முறைகள் - சட்ட மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் ஆணையர் மற்றும்

பணியாளர்கள் பொதுமக்களிடம் இருந்து கட்டிட வரைபட அனுமதி, வீட்டுத்தீர்வை பெயர் மாற்றம், புதிய வீட்டுத்தீர்வை, குடிநீர் தீர்வை பெயர் மாற்றம், புதிய குடிநீர் இணைப்பு, பிறப்பு / இறப்பு பதிவு செய்தல் மற்றும் இதர பணிகளுக்கு லஞ்சம் பெற்று வருவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் ஆய்வாளர் திருமதி.ஜெ.அனிதா, காவல் ஆய்வாளர் திருமதி.வெ.அன்னலெட்சுமி மற்றும் காவல் ஆளினர்கள் சகிதம் 22.09.2026ம் தேதி 14.30 மணி முதல் 15.00 மணி வரை காயல்பட்டினம் நகராட்சி அலுவலக நடவடிக்கைகளை கண்காணித்ததில் அங்கு பணிபுரியும் ஆணையர் மற்றும் பணியாளர்கள் பொதுமக்களிடம் இருந்து லஞ்சமாக பணம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததையடுத்து, 22.09.2026ம் தேதி 15.00 மணி முதல் 19.45 மணி வரை காயல்பட்டினம் நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அறை, பொது பிரிவு, சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது காயல்பட்டினம் நகராட்சி ஆணையர் அறையில் இருக்கையில் அமர்ந்திருந்த பின்னர் விசாரித்து பெயர் விபரம் தெரிந்து கொண்ட திரு.ச.மகேஸ்வரன், ஆணையர், காயல்பட்டினம் நகராட்சி அவர்களின் இருக்கைக்கு முன்புறம் இருந்த டேபிளில் வலது பக்க மேல் டிராயரில் இருந்த டைரிக்குள் கத்தையாக மடித்த நிலையில் காணப்பட்ட பணம் ரூ.7,500/-ற்கு திரு.ச.மகேஸ்வரன் அவர்களால் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், அதற்குரிய ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்க இயலாததாலும், மேலும் மேற்படி பணம் சந்தேகத்திற்கிடமான வகையில் இருந்ததாலும், மேற்படி பணம் ரூ.7,500/- மற்றும் அது மடித்த நிலையில் வைக்கப்பட்டிருந்த DIARY 2022, TAMILNADU MUNICIPAL ENGINEERING ASSOCIATION என்று அச்சிடப்பட்ட ஊதா நிற டைரியும் என்னால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி டைரிக்குள் காணப்பட்ட TMB வங்கியில் மகேஸ்வரன் பெயரிலான சேமிப்பு கணக்கு எண் 545100050600109-ல் 23.01.2026ம் தேதி ரூ.1,00,000/-மும், 07.02.2026ம் தேதி ரூ.1,00,000/-மும், 08.07.2026ம் தேதி ரூ.1,00,000/-மும் செலுத்தப்பட்டதற்கான இரசீதுகளும் மற்றும் TMB வங்கியில் 08.01.2026ம் தேதி முத்துகுவியல் டெபாசிட் திட்டத்தில் மகேஸ்வரன் பெயரில் ரூ.1,00,000/- டெபாசிட் செய்யப்பட்டதற்கான டெபாசிட் இரசீது H 0165634-ன் நகல் ஆகியவற்றிற்கு திரு.ச.மகேஸ்வரன் அவர்களால் தகுந்த முகாந்திரம் ஏதும் தெரிவிக்க இயலாததால் அவைகளும் என்னால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி திரு.மகேஸ்வரன் பெயரிலான TMB வங்கி கணக்கு எண் 545100050600109-ற்குரிய பரிவர்த்தனை

விபரங்களினை பார்வையிட்டதில் 21.09.2026ம் தேதி வங்கி இருப்பு தொகையாக ரூ.15,52,379/- இருந்தது. மேலும் அந்த கணக்கில் 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 22.09.2026ம் தேதி வரையிலான பணப்பரிவர்த்தனை விபரங்களினை பார்வையிட்டதில் 27 பரிவர்த்தனைகளில் அவரது வங்கி கணக்கில் ரொக்கமாக பணம் செலுத்தப்பட்டு வரவு வைக்கப்பட்டிருந்த பணம் ரூ.20,06,500/- குறித்து அவரிடம் விளக்கம் கேட்ட போது, கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தனக்கு இடதுகை தோள்பட்டையில் மூட்டுகள் செயற்கை முறையில் பொருத்தப்பட்டுள்ளதாகவும், மேலும் கடந்த ஆண்டு தனது வலது காலில் இருந்த கட்டிக்கு அறுவை சிகிச்சை செய்துள்ளதாகவும், மேற்படி மருத்துவ சிகிச்சை செலவுகளுக்காக மதுரையில் வசித்து வரும் தனது மதினி செல்வநாயகி மற்றும் சிவகாசியில் வசித்து வரும் தனது கொழுந்தியாள் ரமா ஆகியோரிடம் இருந்து கடனாக பெற்ற தொகைகளை தனது வங்கி கணக்கில் அவ்வப்போது செலுத்தி வந்ததாகவும் தெரிவித்தார். காயல்பட்டினம் நகராட்சி அலுவலகத்தின் பொறியியல் பிரிவு வருகைப் பதிவேடு, சுகாதார பிரிவு வருகைப் பதிவேடு, பொது பிரிவு வருகைப் பதிவேடு மற்றும் அலுவலக பணியாளர்கள் தினசரி பணம் கையிருப்பு பதிவேடு - 2026 ஆகியவையும் என்னால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி திடீர் சோதனையின் போது அங்கிருந்த 19 பேரிடம் என் முன்பாக வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறைகள், விசாரணைக்காக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.7,500/-, DIARY 2022, TAMILNADU MUNICIPAL ENGINEERING ASSOCIATION என்று அச்சிடப்பட்ட ஊதா நிற டைரி, TMB வங்கியில் மகேஸ்வரன் பெயரிலான சேமிப்பு கணக்கு எண் 545100050600109-ல் 23.01.2026ம் தேதி ரூ.1,00,000/- செலுத்தப்பட்டதற்கான இரசீது, TMB வங்கியில் மகேஸ்வரன் பெயரிலான சேமிப்பு கணக்கு எண் 545100050600109-ல் 07.02.2026ம் தேதி ரூ.1,00,000/- செலுத்தப்பட்டதற்கான இரசீது, TMB வங்கியில் மகேஸ்வரன் பெயரிலான சேமிப்பு கணக்கு எண் 545100050600109-ல் 08.07.2026ம் தேதி ரூ.1,00,000/- ம் செலுத்தப்பட்டதற்கான இரசீது, TMB வங்கியில் 08.01.2026ம் தேதி முத்துகுவியல் டெபாசிட் திட்டத்தில் மகேஸ்வரன் பெயரில் ரூ.1,00,000/- டெபாசிட் செய்யப்பட்டதற்கான டெபாசிட் இரசீது H 0165634-ன் நகல், பொறியியல் பிரிவு வருகைப் பதிவேடு, சுகாதார பிரிவு வருகைப் பதிவேடு, பொது பிரிவு வருகைப் பதிவேடு, அலுவலக பணியாளர்கள் தினசரி பணம் கையிருப்பு பதிவேடு - 2026 மற்றும் அங்கிருந்த 19 பேரிடம் என் முன்பாக பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைத்து மேற்படி காயல்பட்டினம் நகராட்சி

ஆணையர் திரு.ச.மகேஸ்வரன் அவர்கள் மீது சட்டப்படியான தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் மேற்படி அவரது வங்கி கணக்கில் ரொக்கமாக பணம் செலுத்தப்பட்டு வரவு வைக்கப்பட்டுள்ளதும் சந்தேகத்திற்கிடமான வகையில் உள்ளதால் அது சம்பந்தமாகவும் சட்டப்படியான தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். Sd/- 23.09.2026 ஜ.சரவண வேல்ராஜ் (ஜ.சரவண வேல்ராஜ்), முதுநிலை வருவாய் ஆய்வாளர், உதவி ஆணையர் (ஆயம்) அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி. Sir, Received the complaint on today (23.09.2026) at 16.00 hrs and registered a case in Thoothukudi V&AC Cr.No.10/2026, U/s 7 of PC Act 1988 as amended in 2018. Sd/- 23.9.2026 J.Anitha (J.ANITHA), Inspector of Police, V&AC, TUT. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, ஜ.சரவண வேல்ராஜ் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் காயல்பட்டினம் நகராட்சி அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்து கனம் தூத்துக்குடி மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.V.அன்னலெட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

J. Anitha
23/9/26.
[J. ANITHA]
Inspector of Police
Vigilance and Anti-Corruption
Thoothukudi